Regional Bulletin / Puducherry / Tamil Script / 01.06-2024

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 01.06.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

நாடாளுமன்ற தேர்தலுக்கான 7-வது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு இன்று அமைதியான முறையில் நடைபெற்றது.

அருணாச்சலபிரதேசம் மற்றும் சிக்கிம் மாநிலங்களின் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நாளை நடைபெற உள்ளது.

வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டரின் விலை, 69 ரூபாய் 50 காசுகள் குறைக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக கேரளாவில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற தேர்தலுக்கான 7 ஆவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெற்றது. இமாச்சலபிரதேசம், ஜார்கண்ட், மேற்கு வங்கம், சண்டிகர், உத்திரபிரதேசம், ஒடிசா, பஞ்சாப் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் இன்று நடைபெற்ற இறுதி கட்ட வாக்குப் பதிவில், ஜார்கண்டில் 68 சதவிகிதமும், மேற்கு வங்கம் 70 சதவிகிதமும், இமாச்சலபிரதேசத்தில் 67 சதவிகிதமும், சண்டிகரில் 63 சதவிகிதமும், ஒடிசாவில் 62 சதவிகிதமும், உத்தரபிரதேசத்தில் 54 சதவிகிதமும், பஞ்சாபில் 55 சதவிகிதமும், பீகார் மாநிலத்தில் 49 சதவிகித வாக்குகள் பதிவானதாகவும், மொத்தமாக மாலை 5 மணி நிலபரப்படி 58 சதவிகித வாக்குகள் பதிவானதாகவும் இறுதியாக கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்று 57 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் மொத்தம் 904 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி உத்திரபிரதேச மாநிலத்தின் வாரணாசி தொகுதியில் போட்டியிடுகிறார். பாரதிய ஜனதா கட்சியின் திரு அனுராக் சிங் தாக்கூர், திரு ரவிசங்கர் பிரசாத், காங்கிரஸ் தலைவர்கள் திரு மணீஷ் திவாரி, திரு விக்ரம் ஆதித்ய சிங், ராஷ்டிரிய ஜனதா தளத்தின் மிசா பார்தி மற்றும் திரிணாமுல் காங்கிரசின் அபிஷேக் பானர்ஜி உள்ளிட்டோர் இன்றைய தேர்தலில் போட்டியிட்ட முக்கிய வேட்பாளர்கள் ஆவர்.

இன்றைய நாடாளுமன்ற தேர்தலுடன் ஒடிசா மாநில சட்டப்பேரவையின் 42 தொகுதிகளுக்கான 4 ஆம் கட்ட சட்ட மன்ற தேர்தலும் நடைபெற்றது. மேலும், இமாச்சலபிரதேசத்தின் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும், பீகார், உத்திரபிரதேஷ் மற்றும் மேற்கு வங்கத்தின் தலா 1 தொகுதிக்கும் சட்டமன்ற இடைத் தேர்தல் நடைபெற்றது.

கடந்த ஏப்ரல் 19 ஆம் தேதி தொடங்கிய நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு, 7 கட்டங்களான நடைபெற்று இன்றுடன் முடிவடைந்தன. இந்த 7 கட்ட தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை இம்மாதம் 4 ஆம் தேதி காலை துவங்கி பிற்பகலில் முன்னனி நிலவரங்கள் குறித்து தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி நடைபெற்ற வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலபிரதேசம் மற்றும் சிக்கிம் மாநிலங்களுக்கான சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நாளை நடைபெற உள்ளது. நாளை காலை 6 மணிக்கு வாக்கு எண்ணிக்கை துவங்கி, முதலில் தபால் ஓட்டுகள் எண்ணப்படும். அருணாச்சல பிரதேசத்தில் 24 மையங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. 2 ஆயிரத்திற்கும் அதிகமான தேர்தல் அதிகாரிகள் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடுவர். இம்மாநிலத்தில் மொத்தம் உள்ள 60 சட்ட மன்ற தொகுதிகளில், பாரதிய

ஜனதா கட்சி ஏற்கனவே 10 தொகுதிகளில் போட்டியின்றி வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. சிக்கிம் மாநிலத்தில் 32 சட்ட மன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப் பதிவு நடைபெற்றுள்ளது. இந்த இரண்டு மாநிலங்களின் சட்டமன்றத்திற்கான காலம் நாளை 2 ஆம் தேதியுடன் நிறைவு பெறுவது குறிப்பிடத் தக்கது.

வரும் செவ்வாய் கிழமை 4 ஆம் தேதி நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு இண்டி கூட்டணி தலைவர்களின் கூட்டம் டெல்லியில் இன்று நடைபெற்றது. காங்கிரஸ் தேசிய தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே இல்லத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், மூத்த காங்கிரஸ் தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சரத்பவார் பிரிவு தலைவர் திரு சரத்பவார், சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு அகிலேஷ் யாதவ், ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், தில்லி முதலமைச்சருமான திரு அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவின் மூத்த தலைவரும், ஜார்கண்ட் முதலமைச்சருமான திரு சம்பாய் சோரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலாளர் திரு சீதாராம் எச்சூரி, ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் திரு தேஜஸ்வி யாதவ், திமுக பொருளாளர் திரு டி ஆர் பாலு உள்ளிட்டோர் இக் கூட்டத்தில் கலந்து

கொண்டனர். இந்நிலையில், நாடாளுமன்ற தேர்தல் தொடர்பான வாக்குப்பதிவிற்கு பிந்தைய எந்த விவாதத்திலும் காங்கிரஸ் பங்கேற்காது என்று கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு பவன் கேரே கூறியுள்ளார். காங்கிரஸ் கட்சியின் இந்த முடிவு, நாடாளுமன்ற தேர்தலில் தங்களுக்கான தோல்வியை ஒப்புக் கொள்ளும் விதத்தில் இருப்பதாக பிஜேபியின் தேசிய தலைவர் திரு ஜே பி நட்டா விமர்சித்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் கடுமையான மின்சார தேவைக்கு இடையிலும் நிலக்கரியின் கையிருப்பு 45 மெட்ரிக் டன்னாக தொடர்வதாக மத்திய நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது, 30 சதவிகிதம் அதிகமாகும். அடுத்த 19 நாட்களின் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு இந்த கையிருப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நாட்டின் நிலக்கரி உற்பத்தி வழக்கத்தை விட 8 சதவிகிதம் கூடுதலாக பதிவாகி உள்ளது என்றும் தெரிவித்துள்ள நிலக்கரி அமைச்சகம், அனல் மின் நிலையங்களில், மழைக் கால பயன்பாட்டிற்கு தேவைப்படும் நிலக்கரி, போதுமான அளவில் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டரின் விலை, சிலிண்டர் ஒன்றுக்கு 69 ரூபாய் 50 காசுகள் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களால் குறைக்கப்பட்டுள்ளன. இந்த விலைக் குறைப்பு மூலம் சிலிண்டர் ஒன்றின் விலை தில்லியில் ஆயிரத்து 676 ரூபாயாக விற்கப்படும். கொல்கத்தாவில் 72 ரூபாயும், மும்பையில் 69 ரூபாய் 50 காசுகளும், சென்னையில் 70 ரூபாய் 50 காசுகளும் குறைக்கப்பட்டுள்ளன. இந்த விலைக் குறைப்பு இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

தாம்பரம் விமானப் படை தளத்தில் பயிற்சி முடித்த அக்னி வீரர்களின் அணிவகுப்பு இன்று நடைபெற்றது. விமானப்படையின் மெக்கானிக்கல் மற்றும் ஒர்க் ஷாப் பயிற்சி பள்ளியை சேர்ந்த 234 பெண்கள் உட்பட ஆயிரத்து தொள்ளாயிரத்து 83 அக்னி வாயு வீரர்கள் கடந்த 22 வாரங்களாக கடுமையான பயிற்சி மேற்கொண்டனர். இன்று காலை நடைபெற்ற இவர்களின் பயிற்சி நிறைவு விழாவில், ஏர் வைஸ் மார்ஷல் அமன் கபூர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அக்னி வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். அணிவகுப்பை தொடர்ந்து, வாயு சேனாவின் அக்னி வீரர்கள் யோகா, ஆயுதம் மற்றும் ஆயுதம் இல்லாமல் போரிடுவது உள்ளிட்டவற்றில் தாங்கள் பெற்ற பயிற்சியின் திறமைகளை வெளிப்படுத்தினர். விழாவில் விருதுகள்

பெற்ற வீரர்களை வாழ்த்தி பேசிய ஏர் வைஸ் மார்ஷல் அமன் கபூர், அக்னி வீரர்கள் தங்களது தொழில்சார்ந்த திறனை மேலும் வலுப்படுத்தி, நாட்டின் வான்வழி பாதுகாப்பிற்காக சிறந்த சேவை ஆற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலின் வாக்கு எண்ணிக்கை வரும் 4 ஆம் தேதி நடைபெறுவதை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் குறித்து திமுக நிர்வாகிகளுக்கான காணொளி ஆலோசனை கூட்டம் இன்று காலை நடைபெற்றது. திமுக அமைப்பு செயலாளர் திரு ஆர் எஸ் பாரதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். புதுச்சேரி மாநில திமுக தலைமை அலுவலகத்தில் இருந்து மாநில அமைப்பாளர் திரு இரா சிவா தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு அனிபால் கென்னடி, திரு செந்தில்குமார், திரு சம்பத் உள்ளிட்ட நிர்வாகிகள் இந்த காணொளி ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர். வாக்கு எண்ணிக்கையின் போது, தலைமை முகவர் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

ஒடிசா மாநிலத்தின் பிரபல பொம்மலாட்ட கலைஞர் மகுனி சரன் இன்று காலமானார். கியோன்ஜார் மாவட்டத்தில் உள்ள அவரது இல்லத்தில் இன்று காலமான மகுனி சரனுக்கு வயது 88. அழிந்து வரும்

பாரம்பரிய பொம்மலாட்ட கலைக்கு புத்துயிர் அளித்து, அதன் மேம்பாட்டிற்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட மகுனி சரனை பாராட்டி, கடந்த ஆண்டு நாட்டின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

கேரள மாநிலத்தில் நேற்று மாலை முதல் பெய்து வரும் கனமழையால் மாநிலத்தின் வடக்கு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இடுக்கி, திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு மற்றும் வயநாடு பகுதிகளுக்கு ஆரஞ்சு எச்சரிக்கையும், திருவனந்தபுரம் மற்றும் கொல்லம் மாவட்டங்களை விடுத்து, மற்ற மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையும் இந்திய வானிலை ஆய்வுத் துறையால் விடுக்கப்பட்டுள்ளது. திருச்சூர் மாவட்டத்தில் பல்வேறு தாழ்வான பகுதிகள் மழை நீரால் சூழப்பட்டுள்ளன. இடுக்கி மாவட்டத்தில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. திருவனந்தபுரம் சங்குமுகம் கடற்கரையில் படகு கவிழ்ந்த விபத்தில் மீனவர் ஒருவர் மாயமாகி உள்ளார். தெற்கு கேரள பகுதியிலும், லட்சத்தீவின் கரையோரப் பகுதிகளிலும் நாளை வரை மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், மழைப் பொழிவு அதிகம் இருக்கும் என்று

எதிர்பார்க்கப்படுவதால் பொதுமக்கள் அனைவரும் எச்சரிக்கையாக இருக்குமாறும் மாநில அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவி வரும் வெப்ப அலை அடுத்த 2 நாட்களில் படிப்படியாக குறையும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. வடமேற்கு, மத்திய மற்றும் கிழக்கு இந்திய பகுதிகளில் வெப்ப அலை குறைந்து வருவதாகவும், அரியானா, தில்லி, பஞ்சாப், ராஜஸ்தான், உத்திரபிரதேசம், ஓடிசா, பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களில் நிலவி வந்த வெப்ப அலை தீவிர வெப்ப அலையாக இன்று மாறியுள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. வடகிழக்கு பிராந்தியங்களிலும், மேற்கு வங்கத்திலும், தென்னிந்தியாவின் கேரளா, லட்சத்தீவு, கர்நாடகா மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் அடுத்த 6 நாட்களுக்கு மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தீபகற்ப பகுதிகளில் குறிப்பாக கர்நாடகா மற்றும் எஞ்சிய பகுதிகளான கேரளா, தமிழ்நாடு மற்றும் ராயலசீமாவில் தென்மேற்கு பருவ மழைக்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்து வருவதாகவும் இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாடாளுமன்ற தேர்தலுக்கான 7-வது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு இன்று அமைதியான முறையில் நடைபெற்றது.

அருணாச்சலபிரதேசம் மற்றும் சிக்கிம் மாநிலங்களின் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நாளை நடைபெற உள்ளது.

வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டரின் விலை, 69 ரூபாய் 50 காசுகள் குறைக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக கேரளாவில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. வணக்கம்